வருவாய் இன்றி தவிக்கும் டெல்டா சிறு விவசாயிகள்: அரசு கண் திறக்குமா?

First Published : 29 Jun 2010 01:38:21 AM IST



கடலூர், ஜூன் 28: கடலூர் மாவட்ட காவிரி டெல்டா விவசாயிகள் வருவாய்க்கு வழி இன்றி அவதிப்பட்டு வருகின்றனர்.

÷இம் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனப் பகுதியான 1.5 லட்சம் ஏக்கர் நிலங்களில், ஜூன் மாதம் குறுவை நெல் சாகுபடி தொடங்குகிறது.

÷கர்நாடகத்துடன் காவிரி நீர்த் தாவா தொடங்கியது முதல், கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக குறுவை சாகுபடி என்பது கானல் நீராகிவிட்டது. டெல்டா விவசாயிகள் குறுவை நெல் சாகுபடியையே பெரும்பாலும் மறந்து விட்டனர். ஆங்காங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம், சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் குறுவை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. குறுவை அறுவடை ஆகஸ்ட் மாதத்தில் நிறைவுபெறும்.

அதைத் தொடர்ந்து தென்மேற்குப் பருவமழை பொய்க்காமல், மேட்டூர் அணையில் போதுமான அளவுக்கு நீர் இருந்தால், அத்துடன் வடகிழக்குப் பருவமழையும் உரிய காலத்தில் தொடங்கி விட்டால், 1.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி வெற்றிகரமாக நடைபெறுகிறது. அத்துடன் ஊடு பயிராக உளுந்து பயிரிட்டு அதுவும் விளைந்து விட்டால், டெல்டா விவசாயிகளின் மகிழ்ச்சிக்குத் தடையே இல்லை.

பருவநிலை சரியாக இருந்தால், சம்பா அறுவடை பிப்ரவரி முதல் வாரத்திலும், உளுந்து அறுவடை மார்ச் மாதக் கடைசியிலும் முடிவடைந்து விடும். ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை, வளமான 1.5 லட்சம் ஏக்கர் டெல்டா நிலங்கள், வாழ்விழந்து தரிசு நிலங்களாகக் காட்சி அளிக்கின்றன.

கடலூர் மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் டெல்டா நிலங்களை நம்பி, சுமார் 1 லட்சம் விவசாயிகள் உள்ளனர். இவர்களில் 80 ஆயிரம் பேர் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் நிலங்களின் உரிமையாளர்கள். 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருந்தும் அவை 6 மாதங்கள் தரிசாகி விடுவதால். அந்த விவசாயிகளின் வாழ்க்கையையும் தரிசாகி விடுகிறது.

80 ஆயிரம் சிறு விவசாயிகளில் சுமார் 40 ஆயிரம் பேர், கட்டுமான வேலை உள்ளிட்ட மாற்று வேலைகளை நாடி கேரளம் உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்து விடுவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். மற்றவர்கள் உள்ளூரில் மாற்று வேலைகளைத் தேடிக் கொள்கிறார்கள். இவர்களுக்கு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கான கிராமப்புற வேலை உறுதித் திட்டத்திலும் வேலை கிடைக்காது.

1.5 லட்சம் ஏக்கர் சொந்த நிலங்களைக் கொண்ட ஒரு லட்சம் விவசாயிகள், 6 மாதங்கள் வேலை ஏதுமின்றி, வருவாய்க்கு வழியின்றித் தவிக்கிறார்கள். எனவே கோடைக் காலத்தில் பலன் தரும், மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் தேவை என்கிறார்கள், அப்பகுதி விவசாயிகள்.

÷தமிழக வேளாண் துறையும், வேளாண் பல்கலைக் கழகங்களும் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டு உரிய திட்டங்களை வழங்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

இதுகுறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவரும் காவிரியின் கடைமடை விவசாயியுமான பி.ரவீந்திரன் கூறியது:

கடலூர் மாவட்ட காவிரி டெல்டா விவசாயிகள் சுமார் 80 ஆயிரம் பேர் மார்ச் முதல் செப்டம்பர் மாதம் வரை வேலையேதும் இன்றி சும்மா இருக்கிறார்கள். வருவாய்க்கு வழியில்லை. பலர் மாற்று வேலைகளைத் தேடி இடம் பெயர்ந்து விடுகிறார்கள்.

இத்தகைய நிலைகளை ஆராய, 2 ஆண்டுகளுக்கு முன் கோவை வேளாண் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கன்னையன் தலைமையிலான குழு சிதம்பரத்துக்கு வருகை தந்தது.

÷அக்குழுவிடம் டெல்டா விவசாயிகளின் நிலையை எடுத்துரைத்தோம். அக்குழு என்ன பரிந்துரைத்து என்றும், இதுபற்றி மத்திய மாநில அரசுகள் என்ன நடவடிக்கை எடுத்தன

என்று தெரியவில்லை. 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடப்பதை மாற்றி அமைக்க தமிழக அரசு திட்டம் தயாரிக்க வேண்டும் என்றார்.

**பாகற்காய் விவசாயம்: முன்னுக்கு வந்த கிராமம்**

First Published : 29 Jun 2010 12:00:00 AM IST



அறுவடை செய்யப்பட்ட பாகற்காய்களை விற்பனைக்கு கொண்டு செல்வதற்காக சாக்குப் பைகளில் அடைக்கும் விவசாயிகள்.

உளுந்தூர்பேட்டை, ஜூன் 28: விருத்தாசலம் வட்டம் மணக்கொல்லை கிராமம் பாகற்காய் விவசாயத்தால் தன்னிறைவு பெற்று சிறந்து விளங்குகிறது.

÷இந்த கிராமத்தில் ஆரம்ப காலத்தில் தண்ணீர் இன்மையால் விவசாயம் பின் தங்கிய நிலையில் இருந்து வந்தது. அதனால் கோடைக்காலத்தில் 3 மாத முந்திரி விவசாயத்துக்குப் பிறகு இப்பகுதி மக்கள் பிழைப்புக்காக அருகிலுள்ள நெய்வேலி அனல்மின் நிலைய சுரங்கப் பணிக்கு கூலி வேலைக்கு சென்று வந்தனர்.

÷இக்கிராமத்தில் ஒரு சிலர் 600 அடி ஆழத்துக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து நீர் கண்டுபிடித்ததால் இப்பகுதியில் விவசாயம் செழிப்படையத் தொடங்கியது.

÷முதலில் தோட்டப் பயிரான பாகற்காயை பயிர் செய்ய கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் தொடங்கினர். பின்னர் நாளடையில் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்து தற்பொழுது வீட்டுக்கு ஒரு ஏக்கர் அல்லது அதற்குமேல் பாகற்காய் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பாகற்காய் விவசாயம் அவ்வூர் மக்களை மேன்மையடைய செய்துள்ளது.

÷பாகற்காய் பயிரிடும் முறை: நிலத்தை முதலில் நன்கு உழுது, பின்னர் தொழு உரம் (மக்கிய குப்பை) நிலத்தில் தெளித்து, நிலத்தில் 2 மீட்டர் இடைவெளி விட்டு 2 அடி அகலம் ஒரு அடி ஆழத்துக்கு குழி தோண்டிக் கொள்ளவேண்டும். பின்னர் குழிக்கு அடியுரம் இட்டு குழிக்கு 5 முதல் 7 விதை ஊன்றி காலை மற்றும் மாலை என இரு வேளைகளிலும் 7 நாள்களுக்கு நீர் தெளித்து வரவேண்டும். பின்னர் பாத்தி கட்டி நீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தில் குச்சிகளை நட்டு கம்பிகளால் பந்தல் அமைத்துகொள்ள வேண்டும்.

÷பாகற்கொடி பந்தலில் படரத் தொடங்கியுடன் 40 நாள்களில் காய்க்கத் தொடங்கிவிடும். அதிலிருந்து வாரத்துக்கு இருமுறை காய்களை பறிக்கவேண்டும். இந்த விவசாயத்துக்கு மருந்து அதிகம் தேவைப்படும். 6 மாத காலம் கொண்ட இப்பயிரால் ஏக்கருக்கு 10 டன் முதல் 15 டன் வரை பாகற்காய் கிடைக்கிறது. ஒரு டன் பாகற்காய் ரூ.15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை விலை போகிறது. இந்த விவசாயத்தில் செலவு போக ஏக்கருக்கு ரூ.1.50 லட்சத்துக்கு மேல் லாபம் கிடைக்கிறது.

÷இவ்விவசாயத்தை இருளக்குறிச்சி, மோகாம்பரிக்குப்பம், இராமநாதபுரம், ஆலடி, மேற்கிருப்பு, முடப்புள்ளி, உளுந்தூர்பேட்டை வட்டம் வானம்பட்டு, மட்டிகை, கல்லமேடு, தொப்பையான்குளம், ஒடப்பன்குப்பம் உள்ளிட்ட கிராமங்களிலும் தற்பொழுது விவசாயம் செய்து வருகின்றனர்.

÷இக்கிராமத்தில் பயிரிடப்படும் பாகற்காய்களை சென்னை கோயம்பேடு, கும்பகோணம், பண்ருட்டி, புதுச்சேரி, திருச்சி, ஒட்டன்சத்திரம் உள்பட பல்வேறு இடங்களிலிருந்து வியாபாரிகள் நேரிடையாக வந்து கொள்முதல் செய்துகொள்கின்றனர்.

÷பயன்கள்: பாகற்காயில் மருத்துவ குணங்கள் உள்ளதால் சர்க்கரை நோயாளிக்கு உகந்ததாகவும், குடற்புழுக்களை கட்டுப்படுத்தவும், நரம்பு தளர்ச்சி உள்ளவர்களுக்கு உகந்ததாகவும் உள்ளது. ரத்த அழுத்தம் உள்ளவர்கள் பாகற்காயை பயன்படுத்தக்கூடாது.

**கொடைக்கானலில் பலாப் பழம்  விளைச்சல் அமோகம்**

First Published : 28 Jun 2010 11:36:44 AM IST

கொடைக்கானல், ஜூன் 27: கொடைக்கானலில் பல்வேறு வகையான பழங்கள் விளைகின்றன. இதில் முக்கியமாக ஆரஞ்சு, பட்டர் புரூட், ஆப்பிள், மரத்தக்காளி,

பிளம்ஸ், பீச்சஸ், பலா ஆகியவைகளும் இங்கு விளைகின்றன. ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை பலாப் பழ சீசன் காலமாகும். இந்தாண்டு பலாப் பழம் நன்கு விளைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சிறிய பழம் ரூ.40 வரையிலும், பெரிய பழம் ரூ.80 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இப்பழமானது அடுக்கம், சாமக்காட்டு பள்ளம், பெருமாள்மலை, ஊத்து, வடகரைப்பாறை, நன்டாங்கரை, மச்சூர், பாலமலை ஆகிய பகுதிகளில் விளைகிறது. இந்த பலாப் பழங்கள் மதுரை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

**'நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்பம் அவசியம்'**

First Published : 28 Jun 2010 11:08:43 AM IST

பெரம்பலூர், ஜூன் 27: எண்ணெய் நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்பம் அவசியம் தேவை என்றார் பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் சி. செந்தமிழ்ச்செல்வன்.

நிலக்கடலையில் அதிக மகசூல் பெறுவது குறித்தும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முறை குறித்தும் அவர் மேலும் கூறியது:

விதை நிலக்கடலையை விதைக்கும் முன் உயிர் உரங்களான ரைசோபியம் (கடலை) 3 பாக்கெட், பாஸ்போ பாக்டீரியா 3 பாக்கெட்டை ஆறிய அரிசிக் கஞ்சியில் கலந்து 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். விதைப்புக்கு முன், ஒரு ஏக்கருக்கு 5 கிலோ கடலை நுண்சத்தை மணலுடன் கலந்து விதைக்க வேண்டும். பயிருக்கு தேவையான பேரூட்டச் சத்துக்களுடன், நுண்ணூட்டச் சத்துகளும் பயிருக்கு கிடைத்து அதிக மகசூல் பெறலாம்.

ஜிப்சம் 80 கிலோவை மேலுரமாகவும், அடியுரமாகவும் விதைத்து 40 அல்லது 45 நாள்களில் செடிகள் பூத்து விழுதுகள் இறங்கும் காலத்தில் வயலில் இட்டு மண் அணைக்க வேண்டும். மேலுரமாக இடும்போது, வயலில் போதிய ஈரப்பதம் இருக்க வேண்டும். இதனால் மண் பொலபொலவென இருப்பதால், விழுதுகள் இறங்கி காய்ப் பிடிக்க

உதவும். காய்கள் முற்றி, தரமான நிலக்கடலை உருவாக சுண்ணாம்புச் சத்தும், எண்ணெயில் புரத அளவு அதிகரிக்க கந்தகச் சத்து உதவகிறது.

பூ, பிஞ்சு உதிர்வதை தடுக்க, பயிர் பூக்கும் தருணத்தில் 75 நாள்கள் கழித்து மீண்டும் நுண்ணூட்டக் கரைசல் தெளிக்க வேண்டும். இரண்டு கிலோ டி.ஏ.பி. உரத்தை தண்ணீரில் கரைத்து 1 நாள் ஊறவைத்து, மறுநாள் தெளிந்த கரைசலை வடிகட்டியப் பிறகு மற்ற உரங்களைக் கரைத்து 490 லிட்டர் நீரில் கலந்து தெளித்தால் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதைத் தடுத்து, அதிகமான மகசூல் பெறலாம்.

விவசாயிகளுக்குத் தேவையான விதைக் காய்கள் திண்டிவனம்- 7 (டி.எம்.வி-76) விருத்தாசலம்- 2 (வி.ஆர்.ஐ-2) உள்ளிட்ட விதை ரகங்கள் மற்றும் டி.ஏ.பி. அம்மோனியம் சல்பேட், போராக்ஸ், பிளானோபிக்ஸ் ஆகிய உரங்கள் பெரம்பலூர் வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வழங்கப்படுகிறது என்றார் அவர்.

**கொள்முதல் விலை உயர்வு: பட்டுக்கூடு விவசாயிகள் மகிழ்ச்சி!**

First Published : 28 Jun 2010 10:32:10 AM IST
Last Updated : 28 Jun 2010 12:47:01 PM IST

தருமபுரி, ஜூன் 27: தருமபுரி மாவட்டத்தில் உள்ள பட்டுக்கூடு விற்பனை அங்காடிகளில் பட்டுக்கூடு கொள்முதல் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் 16 இடங்களில் பட்டுக் கூடு விற்பனை அங்காடிகள் உள்ளன. இதில், தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய இடங்களில் உள்ளன.

இந்த அங்காடிகளில் விவசாயிகள் கொண்டுவரும் பட்டுக்கூடுகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் பட்டு நூற்பாலை முகவர்கள் வாங்கிச் செல்கின்றனர்.

பருவமழை குறைந்துள்ளதாகவும், நிலத்தடி நீர் மட்டம் போதிய அளவு இல்லாததாலும் மல்பெரி சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், உணவுப் பொருள்களைப் பயிரிட்டுவந்த விவசாயிகள், தற்போது பட்டுக்கூடு தயாரிக்கத் தொடங்கிவிட்டனர். தருமபுரி மாவட்டத்தில் உள்ள 91 பட்டு நூற்பாலைகள், 28 நூல் முறுக்கேற்றும் ஆலைகள் ஆகியவற்றுக்குத் தேவையான பட்டுக் கூடுகள் இவ்விரு அங்காடிகளில் இருந்து பெறப்படுகின்றன.

இதுமட்டுமின்றி, பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தரமான வெண்பட்டுகளை கொள்முதல் செய்ய இவ்விரு அங்காடிகளுக்கு சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்தும், அண்டை மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளும், பட்டுநூல் முகவர்களும் அதிக அளவில் வருகின்றனர்.

இந்நிலையில், இந்த ஆண்டு சேலம், கோவை, கோபி, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளிலுள்ள பட்டுக்கூடு கொள்முதல் அங்காடிகளைவிட தருமபுரி மாவட்டத்தில் செயல்படும் பட்டுக்கூடு அங்காடிகளில் கூடுதல் விலைக்கு பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், பட்டுக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆசியாவிலேயே பெரிய பட்டுக்கூடு விற்பனை சந்தை எனப்படும் கர்நாடகத்தில் உள்ள ராம்நகர் சந்தையில் நாள்தோறும் 40 ஆயிரம் பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இந்நிலையில், பாலக்கோடு, பென்னாகரம் அங்காடிகளுக்கு நாள்தோறும் ஏராளமான முகவர்களும், விவசாயிகளும் வருகின்றனர். இதனால், மாதந்தோறும் தொழில் நடைபெறும் அங்காடிகளாக இவை உள்ளன.

கடந்த 6 மாதங்களில் மார்க்கெட் நிலவரம்:

கடந்த 6 மாதங்களில் கர்நாடக மாநிலம் ராம்நகரில் நடைபெற்ற பட்டுக்கூடு சந்தையில் வெள்ளை பட்டுக்கூடுகள் அதிகபட்சமாக 1 கிலோ ரூ.260-க்கும், குறைந்தபட்சமாக ரூ.195க்கும், மஞ்சள் பட்டுக்கூடுகள் அதிகபட்சமாக ரூ.235-க்கும், குறைந்தபட்சமாக ரூ.110-க்கும் விலை போனது.

இதேபோல் தருமபுரி பட்டுக்கூடு சந்தையில், வெள்ளை பட்டுக்கூடு அதிகபட்சமாக 1 கிலோ ரூ.248-க்கும் குறைந்தபட்சமாக ரூ.246-க்கும், மஞ்சள் பட்டுக்கூடு அதிகபட்சமாக ரூ.205க்கும் குறைந்தபட்சமாக ரூ.155-க்கும் விலை போனது.

கோவை பட்டுக்கூடு சந்தையில் வெள்ளை பட்டுக்கூடு அதிகபட்சமாக 1 கிலோ ரூ.245-க்கும் குறைந்தபட்சமாக ரூ.215-க்கும், மஞ்சள் பட்டுக்கூடு 1 கிலோ அதிகபட்சமாக ரூ.191-க்கும், குறைந்தபட்சமாக ரூ.142-க்கும் விலை போனது.

விவசாயிகள் வருகை அதிகரிப்பு:

இதுகுறித்து பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் கே.ஜெயவேல் கூறியது:

அங்காடிகளுக்கு எடுத்து வரப்படும் பட்டுக் கூட்டின் தரத்தைப் பொருத்து விலை நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்யும் நாளன்றே

விவசாயிகளுக்கு பணம் அளிக்கப்படுகிறது. இதனால் தருமபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு நாள்தோறும் விவசாயிகள் அதிக அளவில் வருகின்றனர் என்றார்.

விற்பனை விலை அறிய எஸ்.எம்.எஸ்.:

மாநிலத்திலுள்ள முக்கிய பட்டுக்கூடு விற்பனை அங்காடிகளில் ஒவ்வொரு நாளின் விற்பனை விலையை உடனுக்குடன் எஸ்எம்எஸ் மூலம் தெரிவிக்க பட்டு வளர்ச்சித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**'நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்பம் அவசியம்'**

First Published : 28 Jun 2010 11:08:43 AM IST

பெரம்பலூர், ஜூன் 27: எண்ணெய் நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்பம் அவசியம் தேவை என்றார் பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் சி. செந்தமிழ்ச்செல்வன்.

நிலக்கடலையில் அதிக மகசூல் பெறுவது குறித்தும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முறை குறித்தும் அவர் மேலும் கூறியது:

விதை நிலக்கடலையை விதைக்கும் முன் உயிர் உரங்களான ரைசோபியம் (கடலை) 3 பாக்கெட், பாஸ்போ பாக்டீரியா 3 பாக்கெட்டை ஆறிய அரிசிக் கஞ்சியில் கலந்து 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். விதைப்புக்கு முன், ஒரு ஏக்கருக்கு 5 கிலோ கடலை நுண்சத்தை மணலுடன் கலந்து விதைக்க வேண்டும். பயிருக்கு தேவையான பேரூட்டச் சத்துக்களுடன், நுண்ணூட்டச் சத்துகளும் பயிருக்கு கிடைத்து அதிக மகசூல் பெறலாம்.

ஜிப்சம் 80 கிலோவை மேலுரமாகவும், அடியுரமாகவும் விதைத்து 40 அல்லது 45 நாள்களில் செடிகள் பூத்து விழுதுகள் இறங்கும் காலத்தில் வயலில் இட்டு மண் அணைக்க வேண்டும். மேலுரமாக இடும்போது, வயலில் போதிய ஈரப்பதம் இருக்க வேண்டும். இதனால் மண் பொலபொலவென இருப்பதால், விழுதுகள் இறங்கி காய்ப் பிடிக்க உதவும். காய்கள் முற்றி, தரமான நிலக்கடலை உருவாக சுண்ணாம்புச் சத்தும், எண்ணெயில் புரத அளவு அதிகரிக்க கந்தகச் சத்து உதவகிறது.

பூ, பிஞ்சு உதிர்வதை தடுக்க, பயிர் பூக்கும் தருணத்தில் 75 நாள்கள் கழித்து மீண்டும் நுண்ணூட்டக் கரைசல் தெளிக்க வேண்டும். இரண்டு கிலோ டி.ஏ.பி. உரத்தை தண்ணீரில் கரைத்து 1 நாள் ஊறவைத்து, மறுநாள் தெளிந்த கரைசலை வடிகட்டியப்

பிறகு மற்ற  உரங்களைக் கரைத்து 490 லிட்டர் நீரில் கலந்து தெளித்தால் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதைத் தடுத்து, அதிகமான மகசூல் பெறலாம்.

விவசாயிகளுக்குத் தேவையான விதைக் காய்கள் திண்டிவனம்- 7 (டி.எம்.வி-76) விருத்தாசலம்- 2 (வி.ஆர்.ஐ-2) உள்ளிட்ட விதை ரகங்கள் மற்றும் டி.ஏ.பி. அம்மோனியம் சல்பேட், போராக்ஸ், பிளானோபிக்ஸ் ஆகிய உரங்கள் பெரம்பலூர் வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வழங்கப்படுகிறது என்றார் அவர்.

**'விதைப்பு பருவத்தில் தரமான விதை வேண்டும்': தேமுதிக**

First Published : 28 Jun 2010 11:08:28 AM IST

பெரம்பலூர், ஜூன் 27: விவசாயிகளுக்கு, விதைப்பு பருவத்தில் தரமான விதை கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் பெரம்பலூர் ஒன்றிய தேமுதிக சார்பில் வலியுறுத்தப்பட்டது.

பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் அருகில், பெரம்பலூர் ஒன்றிய தேமுதிக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, கட்சியின் பெரம்பலூர் ஒன்றியச் செயலர் வாசு. ரவி தலைமை வகித்தார். ஒன்றிய அவைத் தலைவர் பி. கோவிந்தன், ஒன்றியத் துணைச் செயலர்கள்  எம். பெருமாள், எஸ். சுரேஷ், எம். கலைச்செல்வன், பி. செல்வக்குமார், மாவட்டப்  பிரதிநிதி எஸ். செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டச் செயலர் துரை. காமராஜ், பெரம்பலூர் சட்டப்பேரவை தொகுதி பொறுப்பாளர் ஏ. சின்னசாமி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில், தேமுதிக நிறுவனத்தலைவர் விஜயகாந்த் பிறந்த நாளையொட்டி, பெரம்பலூர் பகுதியில் உள்ள அனைத்து கிளைகளிலும் கொடியேற்றி இனிப்பு வழங்குவது. மேலும், அன்றைய தினம் மகளிர் சுய உதவிக்குழு தொடங்குவது. விவசாயிகளுக்கு, விதைப்பு பருவத்தில் தரமான விதை கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். லாடபுரம் மயிலூற்று அருவியை சுற்றுலாத்தளமாக அறிவித்து, இதுவரை எவ்வித பணியும் தொடங்கவில்லை. எனவே, அந்தப்பணியை உடனடியாக தொடங்க வேண்டும்.

பெரம்பலூர் நகராட்சிப் பகுதியில் புதை சாக்கடைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்ட சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரம்பலூர் நகரில், போக்குவரத்தை சீரமைக்க புறவழிச் சாலை பணியை உடனே தொடங்க வேண்டும். குரும்பலூரில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரி அருகேயுள்ள அரசு மதுபானக் கடையை, வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும்.

பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வை தேமுதிக சார்பில் கண்டிக்கிறோம் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கட்சியின் மாவட்ட அவைத் தலைவர் மா. கணபதி, மாவட்டப் பொருளாளர் சீனி. வெங்கடேசன், நகரச் செயலர் சி. ஜெயக்குமார், மாவட்டத் துணைச் செயலர் ஆர். கண்ணுசாமி, பொதுக் குழு உறுப்பினர்கள் டி. செல்லதுரை, பி. ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர் ஆர். ரங்கராஜ், கேப்டன் மன்றச் செயலர் தவசி. அன்பழகன், துணைச் செயலர் செல்ல. காமராஜ், இளைஞரணிச் செயலர் எம். கார்த்திக், மகளிரணித் தலைவி கலாவதி கருணாநிதி, வர்த்தக அணிச் செயலர் ஜோதிலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, கட்சியின் குரும்பலூர் பேரூர் செயலர் தி. ரமேஷ் வரவேற்றார். ஒன்றியப் பொருளாளர் பி. நீல்ராஜ் நன்றி கூறினார்.

**கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 28 Jun 2010 11:07:51 AM IST

பெரம்பலூர், ஜூன் 27: பெரம்பலூர் ரோவர் வேளாண் கல்லூரி கூட்ட அரங்கில், ரோவர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில், கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமுக்கு, ரோவர் வேளாண் கல்லூரி முதல்வர் ஜி. ஜேம்ஸ் பிச்சை தலைமை வகித்தார்.

பயிற்சி முகாமில், உழவியல் துறைப் பேராசிரியர் ஜெயச்சந்திரன், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பயிர் வினையியல் துறைப் பேராசிரியர் ஆன்டனி ஜோசப் சவேரியர், தாவர நோயியல் துறைப் பேராசிரியர் கே. யமுனாராணி, பூச்சியியல் துறை உதவி

பேராசிரியர் எஸ். கவிதா ஆகியோர், கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து, நவீன தொழில்நுட்பம் குறித்து விளக்கினர்.

இந்தப் பயிற்சி முகாமில், உதவி பேராசிரியர்கள் எஸ். பிரவீனா, ஜெயபிரீதா மற்றும் தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலை கரும்பு அலுவலர்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் பங்கேற்ற நபர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

முன்னதாக, உழவியல் துறை உதவி பேராசிரியர்கள் எஸ். செந்தில்குமார் வரவேற்றார். ராஜசேகரன் நன்றி கூறினார்.

தினமலர்

**நீர், நிலவளத் திட்டத்தில் முறைகேடு : விவசாயிகள் சங்கத்தினர் குற்றச்சாட்டு**

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தில் ஏரிகள் சீரமைப்பில் நடக்கும் மோசடிகளை தடுக்க வேண்டும் என விவசாய பிரதிநிதிகள் கலெக்டரிடம் புகார் தெரிவித்தனர்.

விழுப்புரத்தில் நடந்த விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், துணைத் தலைவர் மாதவன் புகார் மனு கொடுத்து பேசியதாவது:நீர் நிலவளத் திட்டத்தில் நீர் பாசன கட்டமைப்புகளை சீரமைக்கும் வகையில் வராக நதி வடிநிலப் பகுதியில் உள்ள 236 ஏரிகள், 31 அணைக் கட்டுகள் மற்றும் 425 கிலோ மீட்டர் நீளமுள்ள வரத்து வாய்க்கால்கள் சீரமைப்பிற்கு 35 கோடி ரூபாய் அரசு நிதி ஒதுக்கியது.வேளாண்மை, கால்நடை, மீன்வளம் உட்பட 8 துறைகளின் உதவிகளுடன் செம்மைநெல் சாகுபடி, உயர் ரக மணிலா மற்றும் பயறு வகை சாகுபடி, வணிக ரீதியாக லாபம் தரும் மா, சப்போட்டா, வாழை, காய்கறிகள் பயிரிடுதல்,

மீன் வளர்த்தல் அதற்கான மானியங்களை வழங்கி மேல்மலையனூர், செஞ்சி, வல்லம், மயிலம், வானூர், கண்டமங்கலம், கோலியனூர், காணை, விக்கிரவாண்டி, முகையூர் ஒன்றியங்களில் இத்திட் டங்கள் நடந்து வருகிறது.இந்த திட்டத்தில் ஏரிக்கரையின் மேல்மட்டத்தை 3 மீட்டர் அகலமாக மாற்றுவதாகக் கூறி கரைமேல் இருந்த லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்களை வெட்டி கொள் ளையடித்து விட்டனர். இருக்கும் உயரத்தைவிட 7 அடி உயரம் கரையை உயர்த்தியதாகவும், கரை மாதிரிகளை கருங்கல் கொண்டு கட்டியதாகவும், அனைத்து மதகுகளும் புதுப்பித்துள்ளதாக கணக்கு எழுதி மோசடி செய்துள்ளனர்.

மதகுகளை திறப்பதற்கு வசதியாக படிகள் அமைத்துள்ளதாகவும், கரைகள் சரியாமல் இருக்க கருங்கல் சுவர் கட்டியுள்ளதாகவும் ஏமாற்றியுள்ளனர். இதில் 20 சதவீதப் பணிகளைக் கூட எந்த இடத்திலும் செய்யவில்லை. அதிகாரிகளின் உதவியுடன் பொய் கணக்கு எழுதி ஏமாற்றியுள்ளனர். நீர்வள நிலவளத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்த நிதியில் விவசாயிகள் வாழ்க்கை மேம்படவில்லை. இந்த மோசடி குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும், திட்டப்பணிகளை முழுமைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் பழனிசாமி தெரிவித்தார்.

**சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம்**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவி., தாலுகாவில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 20 எக்டேரில் தக்காளி, வாழைஉட்பட தோட்டபயிர்கள் சாகுபடிசெய்யப்படவுள்ளது. சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சத மானியம், 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நீரில் கரையும் உரங்களும் மானியமாக வழங்கப்படுகின்றன. தேவைப்படும் விவசாயிகள் ஸ்ரீவி., தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என உதவி இயக்குனர் சந்திரன் தெரிவித்துள்ளார்.

**நெல்லை கால்வாயில் தண்ணீர்:விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

திருநெல்வேலி:நெல்லை கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் வலியுறுத்தினர்.நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் நெல்லை நயினார்குளம் பாசன விவசாயிகள் சங்க தலைவர் நெல்லையப்பன், இணைத் தலைவர் நம்பிராஜன், துணைத் தலைவர் தங்கையா மற்றும் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:நெல்லை கால்வாயில் தண்ணீர் திறக்கப்படாததால் கால்வாய்கள், குளங்களில் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. ஒவ்வொரு பாசனத்திலும் வாழை பயிர்களுக்கும், ஆடு, மாடுகள் குடிப்பதற்கும் தண்ணீர் திறந்து விட வேண்டும். இதன் மூலம் விவசாயிகளுக்கு பெரிதும் பயன் கிடைக்கும்.இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாய கடன் திரும்ப செலுத்த வேண்டுகோள்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வங்கிகளில் கடன் பெற்றுள்ள விவசாயிகள் 75 சதவீத தவணை தவறிய கடன் தொகையை வரும் 30ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் கடன் பெற்று கட்டத்தவறிய, விவசாய கடன் தள்ளுபடி மற்றும் கடன் நிவாரணதிட்டம் 2008-ன் கீழ் பயன்பெறும் இதர விவசாயிகள் தங்களுடைய பங்கான 75 சதவீத கடன் தொகையை வரும் 30ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

பெரும்பாலான விவசாயிகள் மீண்டும் கால அவகாசம் நீட்டிக்கப்படும் அல்லது கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் அதனால் கடனை கட்ட தேவையில்லை என்ற எண்ணத்தில் உள்ளனர். இது தொடர்பாக 75 சதவீதம் தவணை தவறிய கடனை வரும் 30ம் தேதிக்குள் திருப்பி செலுத்தி மத்திய அரசின் 25 சதவீத நிவாரணத்தை பெற்றுக்கொள்ளலாம். மேலும் போதுமான அளவு பருவமழை பொழியும் என எதிர்பார்ப்பதால் மற்றும் ஒரு தள்ளுபடி அல்லது கால அவகாசம் நீட்டிப்பதற்கான வாயப்போ இல்லை. கடனை திருப்பி செலுத்தாத பட்சத்தில் கடன் வாராக் கடனாக கருதப்பட்டு அந்த விவசாயிகள் கடன் பெற்ற வங்கி அல்லது சொசைட்டி மற்றும் வேறு

எந்த வங்கியிலும், எந்தவிதமான கடன்களையும் பெற முடியாத நிலைக்கு ஆளாக நேரிடும்.

மேலும், நபார்டு வங்கியானது விவசாய கடன் தாரர்கள் பற்றி விபரங்களை ஒருங்கிணைத்து ஒரு தொகுப்பாக வைக்க உள்ளதால் கடனை கட்ட தவறிய விவசாயிகள் வேறு வங்கிகளில் கடன் பெற இயலாது. வாராக் கடனாக அறிவிக்கப்படும் பட்சத்தில் சட்ட ரீதியாக அணுகுவது, வாகனம் மற்றும் நிலத்தை ஏலம் விடுவது போன்ற அனைத்து விதமான வசூல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும். வங்கிப்பணம் என்பது பொதுமக்கள் வங்கியில் இட்டு வைத்துள்ள பணம் ஆதலால் கடன் பெற்ற விவசாயிகள் கடன் தொகையை தவறாமல் திருப்பி செலுத்த வேண்டியது அவர்களின் தார்மீக பொறுப்பாகும். விவசாயிகள் வரும் 30ம் தேதிக்குள் தங்களது 75 சதவீத தவணை தவறிய தொகையினை செலுத்தி தங்கள் கடன் வாராக்கடனாகாமல் தவிர்க்கவும். மேலும் மத்திய அரசின் 25 சதவீத நிவாரணத்தை பெற்று பயன் அடையலாம்.